

## இருமொழிக் கொள்கை:

# தமிழ்நாட்டின் மானம் காக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## மிரட்டலுக்குப் பயந்து அ.தி.மு.க.வை அடகு வைக்கும் எடப்பாடி பழனிசாமி!

**சென்னை, மார்ச் 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் "இருமொழிக் கொள்கை பணப் பிரச்சினை அல்ல : நம் இனப் பிரச்சினை: இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை; தமிழ்நாட்டின் மானப் பிரச்சினை" என்கிறார். எடப்பாடி அவர்களோ, ஒரு மிரட்டல் வந்தவுடன் அ.தி.மு.க-வையே அடகு வைக்கிறார் !**

**இது பற்றிய விவரம்:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.3.2025 - செவ்வாய்க் கிழமை அன்று, பேரவையில் இருமொழித் திட்டம் குறித்து உரையாற்றுகையில், "இன்று காலையில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெல்லிக்குச் சென்றிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. டெல்லிக்குச் சென்றிருக்கும் நேரத்தில் யாரைச் சந்திக்கப் போகிறார் என்ற அந்தச் செய்தியும் வந்திருக்கிறது. அப்படிச் சந்திக்கும் நேரத்தில் இருமொழிக் கொள்கை குறித்து அவர் அங்கே வலியுறுத்த வேண்டும் என்ற வேண்டுகோளை, இந்த அவையின் மூலமாக நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

**எடப்பாடிக்கு அமித் ஷா எச்சரிக்கை!**

ஆனால், நேற்று முன்தினம் வெளிவந்துள்ள செய்தி அதற்கு மாறாக உள்ளது. அதாவது, டெல்லி சென்ற நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், தம்முடைய கட்சி நிர்வாகிகளுடன் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்தித்துச் சால்வை அணிவித்து மகிழ்ந்திருக்கிறார்.

சிறிது நேரத்தில் அவருடைய கட்சி நிர்வாகிகளை வெளியே அனுப்பி விட்டு, அமித்ஷா அவர்கள் எடப்பாடி பழனிசாமியிடம் பேசி இருக்கிறார். அப்போது அமித்ஷா அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் உறவினர் ரூ.650கோடி வரி முறைகேட்டில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறை கண்டுபிடித்து அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் காட்டி, எச்சரிக்கைவிடுத்து, பா.ஜ.க. கூட்டணிக்குச் சம்மதிக்க வேண்டும். சம்மதிக்காவிட்டால், மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிரட்டப்பட்டுள்ளார்.

> அமித்ஷா காட்டிய ஆவணங்களைப் பார்த்ததும் எடப்பாடி பழனிசாமியே அதிர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அதிர்ச்சி அமித்ஷா வீட்டில் இருந்து வெளியே வந்த பின்னரும் நீடித்துள்ளது. காரில் செல்லும் வழியில் எடப்பாடி பழனிசாமி யாரிடமும் பேசாமல் சென்றுள்ளார். தம்பித்துரை வீட்டுக்குச் சென்ற பிறகுதான் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினார் என்று கூறப்படுகிறது.

அந்த மிரட்டலுக்கு அஞ்சி, "பா.ஜ.க.வோடு, கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று கூறிவந்த எடப்பாடி பழனிசாமி அவர்கள், பா.ஜ.க.வுடன் கூட்டணிக்குச் சம்மதம் தெரிவித்து வந்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எடப்பாடி பழனிசாமியின் மகன் மிதுன். அவருடைய (மிதுன்) சகலையின் அப்பா ஈரோட்டைச் சேர்ந்த இராமலிங்கம். இதனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இராமலிங்கத்திற்கு ஏராளமான கான்ட்ராக்ட்கள் வழங்கப்பட்டன. இந்த இராமலிங்கம் என்பவரின் வீடுகளில் அமலாக்கத்துறையும் வருமான வரித்துறையும் சோதனைகள் செய்து பல ஆவணங்களை கைப்பற்றி இருந்தன.

இராமலிங்கத்தின் வீட்டில் வரி ஏய்ப்பு குறித்து கட்டுக்கட்டாக ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், அ.தி.மு.கவின் மூத்த தலைவர்களின் ஊழல்கள் குறித்தும் ஏராளமான ஆவணங்களை அமலாக்கத்துறை, வருமான வரித்துறை சேகரித்து வைத்திருந்தது. மொத்த ஆவணங்களையும் எடப்பாடி பழனிசாமியிடம், அமித்ஷா காட்டி, எச்சரிக்கும் தொனியில் பேசியதாகக் கூறப்படுகிறது. கூட்டணிக்குச் சம்மதிக்காவிட்டால் அ.தி.மு.க. தலைவர்கள் பலருக்கும் சிக்கல் வரும். முதலில் உங்களிடம் இருந்துதான் ஆரம்பிக்கும் என்று கூறியதாகவும் கூறப்படுகிறது.

**ஆவணங்களைப் பார்த்து அதிர்ந்த எடப்பாடி!**

அமித்ஷா காட்டிய ஆவணங்களைப் பார்த்ததும் எடப்பாடி பழனிசாமியே அதிர்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த அதிர்ச்சி அமித்ஷா வீட்டில் இருந்து வெளியே வந்த பின்னரும் நீடித்துள்ளது. காரில் செல்லும் வழியில் எடப்பாடி பழனிசாமி யாரிடமும் பேசாமல் சென்றுள்ளார். தம்பித்துரை வீட்டுக்குச் சென்ற பிறகுதான் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினார். என்று கூறப்படுகிறது.

**பா.ஜ.க.விடம் மண்டியிட்ட எடப்பாடி!**

மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான், சமக்ர சிக்சா திட்டத்திற்கு நிதி தரமுடியும் என்று கூறி ரூ.2,152கோடி நிதியை தமிழ்நாட்டிற்குத் தரமுடியாது என பா.ஜ.க அமைச்சர் ஆணவத்தோடு நாடாளுமன்றத்தில் கூறி மிரட்டிய போதிலும்,

**இது பணப் பிரச்சினை அல்ல; நம் இனப் பிரச்சினை; இளைய சமுதாயத்தைக் காக்கும் பிரச்சினை!**

எனவே ரூ.2 ஆயிரம் கோடி அல்ல; ரூ.10ஆயிரம் கோடியைக் கொடுத்தாலும் புதிய கல்விக் கொள்கையை, மும்மொழித் திட்டத்தை, இந்தித் திணிப்பை ஒருநாளும் ஏற்கமாட்டோம்; இருமொழிக் கொள்கையை என்றும் கை விடமாட்டோம் எனத் துணிச்சலாகப் பதில்கூறி, தமிழ்நாட்டின் மானத்தைக் காத்தவர் - காத்து வருபவர் நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.



ஆனால், உறவினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மிரட்டிய உடனேயே எடப்பாடி பழனிசாமி அவர்கள் மண்டியிட்டு பா.ஜ.க.விடம் கூட்டணிக்குச் சம்மதம் தெரிவித்து வந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றனவே!

தமிழ்மொழியைக் காக்க, தமிழ்நாட்டின் இளைஞர்களைக் காக்க, தமிழ்நாட்டின் மானம் காக்க, தமிழ்நாட்டிற்கு எதிரான ஒன்றிய அரசின் மிரட்டலுக்கு அஞ்சாமல் அதை எதிர்த்து நிற்கும் திராவிட நாயகர் முதலமைச்சர் அவர்களுக்கு முன்னால், ஒரு மிரட்டல் வந்ததுடன் தலைகவிழ்ந்து குனிந்து நின்று, பாதம் தாங்கும் பழனிசாமி அவர்கள், தமிழ்நாட்டை ஏற்கனவே, சீர்குலைத்ததுடன், மீண்டும் தற்போது, தமிழ்நாட்டுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் நிதி தராமல் தொடர்ந்து வஞ்சித்துவரும் ஒன்றிய பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேரப் பணிந்திருப்பது அ.தி.மு.க.வின் சுயநல ரூபத்தைத்தான் காட்டுகிறது.

இது தமிழ்நாட்டிற்கு நல்லதல்ல.

---

### தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும்

## ஒன்றிய அரசைக் கண்டித்து திருப்பூர் கிழக்கு - தெற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

**மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - இல.பத்மநாபன் அறிவிப்பு!**

*திருப்பூர், மார்ச் 28 -*

*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை வருமாறு : -*

*100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் நாளை (29.3.2025 - சனிக்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக திருப்பூர் கிழக்கு, திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் அந்தந்த ஒன்றியச் செயலாளர்கள் கழக நிர்வாகிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*





---

### தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும்

## ஒன்றிய அரசைக் கண்டித்து திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

**மாவட்டப் பொறுப்பாளர் - மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் அறிவிப்பு!**

*திருப்பூர், மார்ச் 28 -*

*திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை வருமாறு : -*

*100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் நாளை (29.3.2025 - சனிக்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அதன் தொடர்ச்சியாக திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர், அவிநாசி, திருமுருகன் பூண்டி, அன்னூர் ஒன்றியங்களில் அந்தந்த ஒன்றியச் செயலாளர்கள் நிர்வாகிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*



*இவ்வாறு திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

### தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும்

## ஒன்றிய அரசைக் கண்டித்து திருப்பூர் மத்திய மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

**மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

*திருப்பூர், மார்ச் 28 -*

*திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு : -*

*100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4,034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் நாளை (29.3.2025 - சனிக்கிழமை) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது அதன் தொடர்ச்சியாக திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியங்களில் அந்தந்த ஒன்றியச் செயலாளர்கள், கழக நிர்வாகிகளை ஒருங்கிணைத்து பொதுமக்களுடன் இணைந்து கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், க.செல்வராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



---

**புதிய கால்களைத் தேடி...**

